Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.


# உதயன்

விலை ரூபா 5-00

[illegible]: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 30 சனிக்கிழமை (14 08 1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 259


# கைதிகளைப் பரிமாற்றம் செய்ய தயார் என்கிறது ஸ்ரீலங்கா அரசு

## காரைநகர் படையினர் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

காரைநகர் தும்புலுப்பிட்டிப் பகுதியில் நேற்றுக் காலை காவலரண் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 25 க்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தி விரட்டினர்.

புலிகளின் ஷெல் தாக்குதலை அடுத்து படையினர் தமது முகாம் பகுதிக்கு திரும்பி ஓடினர். படையினர் தரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதற்குமுன் நேற்று அதிகாலை 2 10 மணியளவில் காரைநகரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். ஷெல்கள் பொன்னாலை, சவுக்கடி, சுழிபுரம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (உ-3-28)

## வட்க்கில் காவலிலுள்ள 33பேருக்கு பதிலாக 33புலிகளை விடுவிப்பராம்

கொழும்பு, ஆகஸ்ட் 14

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 32 பொலிஸாருக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் பதிலாக ஸ்ரீலங்கா அரசு காவலில் வைத்துள்ள விடுதலைப் புலிகளில் அதே எண்ணிக்கையானோரை விடுவிக்கத் தயார் என்று கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

ஒருவருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் கைதிகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் விரும்புவதாகவும் —

கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தின் இந்த முடிவு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் —

இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

கைதிகள் பரிமாற்ற நடவடிக்கைக்கு வசதியாக ஸ்ரீலங்கா இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளில் அறுபது பேரின் பெயர்களைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-கொழும்பு ரயிலில் 2 பெட்டிகள் தீயினால் நாசம்

கொழும்பு, ஆக. 14

வவுனியாவில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயிலில் நேற்றுக் காலை திடீரென தீப்பற்றிக் கொண்டது.

இதனால் ரயிலின் சிற்றுண்டிச்சாலை அமைந்திருந்த ஒரு பெட்டியும் மற்றொரு பெட்டியும் முற்றாக எரிந்து நாசமாகின.

ரயில் விலவத்தைப் பிரதேசத்திற்குள் சென்று கொண்டிருந்த போது அதில் தீப்பற்றிக் கொண்டதாகவும் —

அதனையடுத்து ரயில் நிறுத்தப்பட்டு அதன் இரண்டு பெட்டிகளும் அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அறிவிப்பு ஒரு நாடகம் விடுதலைப் புலிகள் கருத்து

யாழ்ப்பாணம், ஆக. 14

கைதிகள் பரிமாற்றம் குறித்து ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிவிப்பை, சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்களைத் திருப்திப்படுத்த முயலும் ஒரு நாடகமாகவே கருத வேண்டும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்புக் குறித்து புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

சிங்கள யுத்தக் கைதிகள் முன்னர் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது—

யுத்தக் கைதிகளை விடுவிப்பதாயின் ஸ்ரீலங்கா அரசின் காவலில் உள்ள—விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப் படுவோரை-விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்தனர்

ஆனால் ஸ்ரீலங்கா அரசு புலிகள் எனச் சந்தேகிக்கப் படுவோரின் பெயர்ப் பட்டியலை வழங்க மறுத்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா அரசின் சிறைகளில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் இருப்பதை ஸ்ரீலங்கா அரசும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு

(6ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாழில் 'புக்காரா' குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஆக. 14

இரண்டு ''புக்காரா'' குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

எழுதுமட்டுவாழில் தென்னந் தோட்டம் ஒன்றில் வீழ்ந்த குண்டினால் தோட்ட பங்களா தரைமட்டமானது. அடுத்த குண்டுகள் அருகருகே வீழ்ந்து வெடித்ததில் அடுத்த காணியிலிருந்த வீட்டுக் குசினி பலத்த சேதமடைந்தது. பயன் தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்தன.

கிளாலி படகுத் துறையிலும் மூன்று குண்டுகள் வீசப்பட்டன. குண்டுகள் கடலிலும் கரையிலும் வீழ்ந்தன. சேதம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-117 15-72)

## செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ். அதிகாரிக்கு தகவல் இல்லை

கைதிகள் பரிமாற்றத்துக்கு தயார் என்று ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து தங்களுக்குத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் கைதிகள் பரிமாற்றம் குறித்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் நடந்ததாகவும்—

அதன் பின்னர் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்களின் போது யுத்தக் கைதிகளை விடுவிக்க பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்தே ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று வரை கைதிகள் பரிமாற்றம் சம்பந்தமான தகவல் ஏதும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் சொன்னார். (உ-3)

## சித்த மருத்துவ மாணவர் சத்தியாக்கிரகம்

கைதடியில் இயங்கிவரும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் மாணவர்கள், நேற்று முன்தினம் முதல் கைதடி வளாகத்தின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்கள்.

இத்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக மாற்றும்படி கோரி கடந்த 5 ஆம் திகதி முதல் வகுப்புகளை பகிஷ்கரித்து வந்த மாணவர்கள், நேற்று முன்தினம் முதல் தமது போராட்டத்தை சத்தியாக்கிரகமாக விரிவுபடுத்தியுள்ளனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை தமது போராட்டம் தொடரும் என சித்த மருத்துவ மாணவர் மன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-17)

## டி. பியைச் சந்திக்கும் முயற்சியில் கைதிகளின் உறவினர்கள் தோல்வி

லண்டன், ஆக. 14

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவை அல்லது அவரின் செயலாளரைச் சந்தித்து, கைதிகள் சம்பந்தமான விவரங்களைத் தெரிவிக்க முயற்சி எடுத்தனர். ஆனால் அம்முயற்சி கைகூடவில்லை என செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சில் இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்பே உறவினர்களுக்குக் கிடைத்ததாகவும்—

யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என அப்போது உறவினர்களிடம் கூறப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## இனப்பிரச்சினைக்கு அரசு ராணுவ தீர்வு காணமுடியாது

### வரதராஜப்பெருமாள் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 14

''இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக முடிவு கட்டிவிடலாம் என்று இலங்கை அரசு நினைத்தால் அது நடவாத காரியமாகும்.''

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் பகுதியில் இந்திய பாதுகாப்புப் படையினரின் முழுப் பாதுகாப்பில் தலைமறைவாக வாழ்ந்து வரும் திரு. வரதராஜப்பெருமாள் தமது வீட்டில் வைத்து செய்தியாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஆக. 14

கிளாலி-பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை [illegible] வித்துள்ளார். (உ)

## செஞ். குழுவின் நடவடிக்கை உறவினர்களுக்கு அதிருப்தி

கொழும்பு, ஆக. 14

வடக்கில் காவலில் உள்ள யுத்தக் கைதிகளின் விடயம் சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நடவடிக்கை குறித்து —

யாழ். வந்து திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ளனர்.

யுத்தக் கைதிகளின் உறவினர்களுடன் கொழும்பில் உரையாடிய போது இது தெரிய வந்ததாக தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி பி பி ஸியின் சிங்கள சேவை அறிவித்தது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய
தேவஸ்தானம்
வழிபடுவோர் சபை
சங்கானை.

## பொதுச்சபை கூட்டம்

காலம் :- இன்று சனிக்கிழமை [14 - 08 - 93]
நேரம் :- பிற்பகல் மூன்று [3] மணிக்கு
இடம் :- தேவஸ்தான முன்றிலில் நடைபெறும்

வழிபடுவோர் சபை அங்கத்தவர்களையும், அங்கத்துவத்தில் சேர்ந்து கொள்ள விரும்பும் அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்.
நிர்வாக சபை

(6420)

வலிகாமம் பிரிவு வர்த்தக ஊழியர் சங்க

## விசேட பொதுக் கூட்டம்

மேற்படி விசேட பொதுக் கூட்டம் இன்று (14-08-93) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் இடம்பெற இருப்பதால் வலிகாமம் பிரிவிலுள்ள சகல வர்த்தக ஊழியர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

பொ. இராசேஸ்வரன்.
(செயலாளர்)

ஆ. ஐ. சிவனேசன்.
(தலைவர்)

(6619)

## சிறப்புச் சொற்பொழிவு

திருமுறைவாரிதி சிவமகாலிங்கம்
அவர்கள்

இடம்: தாவடி வடக்கு காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
காலம்: 15 8 - 1993 ஞாயிறு இரவு 9 மணி.

விடயம்:

### பக்தி வைராக்கியம்

விளம்பர உதவி:

கே. கே. இராசரத்தினம்
நகை மாளிகை,
277, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(26938)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 18 — 03 — 1928

உதிர்வு: 13 — 07 — 1993

திருமதி
### பூபாலசிங்கம் பாக்கியலக்சுமி

ஆசைக் கோட்டையெல்லாம் அரைநொடியில்
—சாய்ந்ததென்ன!
ஆனந்தம் எல்லாம் அவலமாய் போனதென்ன!
தீயோடு கலந்தாலும் மனதை விட்டுப் போகாது;
உங்கள் நினைவு நம் வாழ்வுக்கு ஒளியாகி
— நிற்குதம்மா!

நினைவில் வாழும்:-
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

548, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

(26942)

### குறைந்த விலையில் கட்டுமரம்

வடமராட்சி, ஆக. 14

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மீனவர்களுக்கு தமிழ் ஈழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக கடல் புலிப்பிரிவு குறைந்த விலையில் கட்டுமரங்களை வழங்கி வருகிறது.

இவற்றைப் பெற விரும்புவோர் பொருண்மிய மேம்பாட்டுக்கழக யாழ். மாவட்ட கடல் புலிப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173-155)

## செய்திக் கொத்து

### முத்திரைகள் வந்துள்ளன

ஆறு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் அண்மையில் பருத்தித்துறைக்கு வந்த வாதுவ கப்பலில் யாழ். பிரதம தபாலகத்திற்கு வந்துள்ளன. இதேபோன்று ஏனைய தபாலகங்களுக்கும் முத்திரைகள் எடுத்துவரப் பட்டுள்ளன. (க-162)

### மருந்து தட்டுப்பாடு

வடமராட்சி, ஆக. 11

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சலரோக நோய்க்குரிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நோயாளர்களின் சிகிச்சைக்குரிய மருந்து வகைகளில் இன்சுலின் ஊசிமருந்து தவிர ஏனைய குளிகை மருந்துகள் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலையிலும் இதே நிலைமை தான் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-173)

### வாசகர் வட்ட கருத்தரங்கு

வாசகர் வட்டக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் மானிப்பாய்ப் பிரதேச பொது நூலக மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் திரு. இ. கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. திரு. ந. சிவபாதம் (புத்தொளி) உட்படப் பலர் கருத்தரங்கில், வாசகர் பெருக்கத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தைப்பற்றி உரையாற்றினார்கள். [க]

### குடிசை வீடுகள் அமைக்க நடவடிக்கை

இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கும் மக்களுக்கு குடிசை வீடுகளை அமைத்து கொடுப்பதற்கு கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (க-17)

### புத்தகங்கள் கொள்வனவு

மானிப்பாய் பட்டினசபை பொது நூலகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு தேவையான பல புத்தகங்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (க-152)

### நூல்நிலைய வசதி

யாழ். மாவட்டத்தில் செயற்படும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு நூல்நிலைய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. நூல்நிலையம் அமைப்பது தொடர்பான ஆரம்ப நடவடிக்கையாக முதற் தொகுதி நூல்களை தேசிய கல்வி நிறுவகம் யாழ். மாவட்டத்திலுள்ள தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 11 தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-11)

# யுத்தகைதிகள் அனைவரும் நோயுற்றுள்ளனராம்

கொழும்பு, ஆக. 14

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருந்த யுத்தக் கைதிகள் அனைவரும் நோயுற்றிருப்பதாக யாழ்ப்பாணம் சென்று கொழும்பு திரும்பிய அவர்களது உறவினர்கள் பி.பி.ஸி. யின் சிங்கள சேவைக்குத் தெரிவித்தனர்.

தெல்தெனியாவைச் சேர்ந்த பி. எம். எக்கநாயக்கா கைதியான தனது சகோதரனின் இரு கண்களின் பார்வையும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (உ-6)

### குழந்தையின் சடலம்

இளாலிக் கரையில் ஒதுங்கியதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்ட குழந்தையின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

10 ஆம் திகதி இளாலியில் மூழ்கிய படகில் மரணமான மோதிலால்நேரு குடும்பத்தின் ஒரே புதல்வனான பிரியந்தன் (ஒன்றரை வயது) என்ற குழந்தையினுடையதே அந்தச் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை இதே படகு விபத்தில் காணாமல் போன வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அதிரூபசிங்கம் இளவேனி (வயது 23) என்பவர் பற்றிய தகவலெதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

### அஞ்சலிக் கூட்டம்

தென்மராட்சி, ஆக. 14

ஆகஸ்ட் மாதத்தில் வீரமரணமடைந்த பளை வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் நாளை இரவு 7.00 மணிக்கு முகமாலையில் பளை வட்டப் பொறுப்பாளர் அன்பு அவர்களின் தலைமையில் நடைபெறும். (உ-117)

### ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 14

கிளிநொச்சி, கொக்காவில், முறிகண்டி பகுதிகளில் ஹெலி ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் 11 25 மணியளவில் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலை நடத்தியது. அதன்பின் ஹெலி இரணைமடுப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டுச் சென்றது (உ-8)

### இழுவைப் படகு கடத்தப்பட்டது

கொழும்பு, ஆக. 14

திருகோணமலையில் மீன்பிடி இழுவைப் படகு ஒன்றை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றிருப்பதாக ஸ்ரீலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளனர். (உ-எ)

## யாழ் மாவட்டத்துக்கான தபால்களை தாமதமின்றி அனுப்புவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஆக. 14

யாழ். மாவட்டத்துக்கான தபால்களை தாமதமின்றி உடனுக்குடன் கப்பலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் அஞ்சல் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

தபால்களை அனுப்புவதில் முன்பு இருந்த தாமதம் இனி இருக்காது என்றும்—

புனர்வாழ்வு அமைச்சு கப்பலில் தபால்களை அனுப்புவதற்கான இடவசதியை செய்து தர சம்மதம் அளித்துள்ளதால் தபால்கள் அனுப்புவதில் தாமதம் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். (இ-8)


## சித்ராலயாவில்....

மீண்டும் உங்களுக்குத் தேவையான
போட்டோஸ்ரற் பிரதிகளை
இப்போது பெறமுடியும்.

### சித்ராலயா

அருச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

(சி/5665)


## மென்பந்துக் கிரிக்கெட் போட்டி

PARA TROPHY
[பரா ஞாபகார்த்த]
"6 OVERS = 6 - A SIDE"

அமரர் க. பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாக
நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும்

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

பிரவேசக் கட்டணம்: 50/-
விண்ணப்ப முடிவு திகதி: 20 - 08 - 1993
அணி ஒழுங்குத் தெரிவு: 21 - 08 - 1993]
பிற்பகல் 3 30 மணி

இடம்: செங்குந்த இந்துக் கல்லூரி மைதானம்

தொடர்பு: ★ நொதேண் விளையாட்டுக் கழகம்
சேச் லேன், கல்வியங்காடு
நல்லூர்.

★ சூரியா ரெயிலறிங்,
நல்லூர் மார்க்கெட் சந்திக்கு அருகில்),
கல்வியங்காடு.

அ. ப. மரியதாஸ்
விளையாட்டுச் செயலாளர்,
நொதேண் வி. க.

(சி-5590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்கமடையும் வரை என்மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டது!

## விடுவிக்கப்பட்ட மீனவர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 14

கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் கம்பி ஒன்றில் தொங்கவிட்டு எம் மீது மின்சாரத்தைப் பாய்ச்சினர். நாம் வேதனையால் கத்திக்குளறி மயக்கம் அடையும் வரை அது தொடர்ந்தது.

நேற்று முன்தினம் படையினரால் விடுவிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவரான ஆனைக்கோட்டை சாவக்காட்டைச் சேர்ந்த நவரத்தினம் சிவரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி மூளாய் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் படையினரால் இரு மீனவர்கள் பிடித்துச் செல்லப்பட்டதும் பின்னர் அவர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதும் தெரிந்தவையே.

திரு. சிவரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:

மூளாய்க் கடல் பரப்பில் பிடிபட்டவுடன் எமது கண்களும், கைகளும் கட்டப்பட்டன. படகில் வைத்தே எம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. முதலில் காரைநகர் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

நான்கு நாட்களின் பின்னரே எமது கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. அதுவரை எமக்கு தண்ணீரோ உணவோ தரப்படவில்லை. தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால் அதற்குப் பதிலாக எம்மீது எச்சில் துப்பப்பட்டது. நான்கு நாட்களும் நாம் கைகளாலும், கம்பிகளாலும் தாக்கப்பட்டோம். காரைநகர் முகாமில் இருந்தபோது 3 தடவைகள் எம் மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டது. என்னுடன் பிடிபட்ட குமார் அரியராசாவிற்கு சிகரெட்டினால் உடம்பில் சூடு போட்டனர்.

நான்கு நாட்களின் பின் கைகள் கட்டப்பட்ட நிலையில் படகு மூலம் காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து டிரக் மூலம் பலாலிக்கு அனுப்பப்பட்டோம். அங்கு வைத்து எமது கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு உணவு தரப்பட்டது. பின்னர் எம்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். [த-15]

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலய சுற்றாடலில் இன்று சனிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் திரு. எஸ். திலகநாயகம் போல் இன்னிசை, மாலை 6மணி முதல்

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீமுத்து விநாயகர் கோயிலில் 5-15 — 6-15 ''துரோணர்'' எனும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு

★ நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்—

பிற்பகல் 2—3 மணிவரை ''ஞானத்தின் திருஉரு'' என்னும் பொருளில் திரு. மு. தியாகராசா சமயச் சொற்பொழிவு.

★ மாலை 5-30 — 6-30 மணி வரை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி ''மாயைப் போர்'' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக சச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00 — 4-30 மணிக்கு கந்தபுராண படனம்.

(க111-126)

## அரசுடன் சேர்ந்து கொள்ள விரும்புகிறார் காமினி

### அமைச்சர் ஹமீது சொல்கிறார்

'ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா அரசுடன் இணைய விரும்புகிறார். அதேபோல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர் அநுரா பண்டாரநாயக்காவும் ஐ. தே. கவை நாடி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை''

இப்படிக் கூறினார் வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீது

ஹரிஸ்பத்துவையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக்கட்சி ஒரு அரசியல்கட்சி அல்ல. அது ஒரு தொண்டர் ஸ்தாபனம். பொதுநல நோக்கில் பணி புரிய விரும்பும் எவரும் இக் கட்சியில் இணையலாம் என்றார்.

(த-3)

## மடு திருநாளில் பங்குபற்ற 150 பேருக்குமட்டும் அனுமதி

### படையினர் கட்டுப்பாடு

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மடுமாதா திருநாளில் கலந்து கொள்ள மன்னார்தீவு வாசிகள் 150 பேருக்க மட்டும் இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

மடுத்திருப்பதியில் குருப்பட்டம் வழங்கும் சமய நிகழ்ச்சி மடுமாதா திருநாளன்று நடைபெறவிருப்பதால் மன்னார் தீவிலிருந்து அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் மற்றும் குருமார், கன்னியாஸ்திரிகள் கலந்து கொள்ள இருப்பதால் அதிக எண்ணிக்கையானவர்களை அங்கு செல்ல அனுமதி வழங்குமாறு மன்னார் குரு முதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளார் மன்னார் தீவுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரியைக் கேட்டுள்ளார்.

மேலும் மடுத் திருப்பதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட மக்கள் இம்மாதம் 17ஆம் திகதியன்று மன்னார் தீவுக்குள் சென்றுவிட வேண்டும் என்றும் மன்னார் இராணுவ அதிகாரி அறிவித்துள்ளார். [த-173]

## ஆடைத் தொழிற்சாலைகள் திட்டம் கைவிடப்பட்டது?

கொழும்பு, ஆக. 14

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவினால் ஆரம்பிக்கப்பட்ட 200 ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது

ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் திட்டத்தைச் செயற்படுத்தும் முதலீட்டுச் சபையின் புதிய தலைவர் ஏ. டி. வாஸ் குணவர்த்தனா கொழும்பு ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் —

வெளிநாடுகளுக்கு தைக்கப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கு கிடைக்கும் கோட்டாக்களைப் பொறுத்தே புதிய ஆடைத் தொழிற்சாலைகள் திறக்கப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த 8ஆம் திகதி வரை நாட்டில் திறக்கப்பட்டுள்ள ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 123 என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## 93பேர் கைது

சென்னை, ஆக. 14

சந்தனக்கடத்தல்காரன் வீரப்பனுக்கு ஆயுதங்களை விநியோகித்து வந்ததாகச் சொல்லப்படும் 93 பேர்களை கர்நாடகத்தில் அதிரடிப் படைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## கடலோர காவல் பணியில் 7 பிரிவுகள்

சென்னை, ஆக. 14

தமிழகத்தில் கடலோரக் காவல் பணியில் இந்தியக் கடற்படையின் ஏழு பிரிவுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தியக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் எஸ். ராம்தாஸ் முன்கண்ட தகவலை சென்னையில் வெளியிட்டார். (த-எ)

## தேர் வடக்கயிறு

தென்மராட்சி, ஆக. 14

நல்லூர் ஆலயத் தேருக்கென கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட வடக்கயிறு இன்று ... வந்து சேர்ந்துள்ளது. (க-117)

## ஆலயங்களில்

இளாலி கண்மணி மாதா கோயில் திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு செபமாலை, திருப்பலி நற்கருணை வழிபாடும் பவனியும், நாளை காலை 6-30மணிக்கு கூட்டுப்பாடற் பூசையும் திருச் சுரூப ஊர்வலமும், ஆசீர் வாதமும், கொடி இறக்கமும் இடம் பெறும். (க)

o o o

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று சனிக்கிழமை ஏகாதசி அபிஷேகம் நடைபெறும். (க.30)

o o o

வட்டுக்கோட்டை அராலி மேற்கு நொச்சிப்பதி விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 8 மணி முதல் விசேட சங்காபிஷேகம் நடைபெறும். (க-161)

o o o

கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய கரவெட்டி புனித மரியாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று சனிக்கிழமை மாலை நற்கருணை ஊர்வலமும், திருச்சுரூப எழுந்தேற்றமும் நாளை ஞாயிறு காலை திருநாள் திருப்பலியும் நடைபெறும். (த-9)

o o o

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 1-40 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 21ஆம் திகதி சனிக்கிழமை முதல் காலைத் திருவிழா நடைபெறும்.

தேர்த் திருவிழா 31ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா அடுத்த மாதம் 1ஆம் திகதியும் இடம்பெறும். (க)

## கோரிக்கை

வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய் ஆகிய பகுதிகளில் அகதி முகாம்களில் வாழும் மக்கள் தமக்குத் தனித்தனிக் குடிசைகளை அமைத்துத் தருமாறு யாழ் அரச அதிபரையும் முகாம்களைப் பராமரிக்கும் போருட் நிறுவனத்தையும் கேட்டுள்ளனர். (க-17)


## தாதியர் பயிற்சி

தாதியர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் 27 - 8 - 93இற்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

''பிரசாந்தி''
10/5 சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம். (26933)

## கேக் கண்காட்சி

திருமதி R. செல்வராணி தேவராஜாவினாலும் அவரது மாணவிகளாலும் நடத்தப்படும்:

காலம்: 1993 .08 - 15, 16, 17 ஆம் திகதிகள்
நேரம்: மு. ப. 8.00 மணி-பி. ப. 7-00மணிவரை

பரிசில் வைபவம் 15ஆம் திகதி
மு. ப. 2-00 மணி

★ கலியாண கேக் வடிவமைப்புக்கள்
★ பிறந்தநாள் கேக்
★ ஸ்ரொக்கி வெட் மலர் வகைகளும்
★ தையல் பூ வேலைப்பாடுகளும்

'ஜெய் மஹால்'
இல. 7, கற்குளி ஒழுங்கை
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

கட்டணம் 5/-
நுழை வாயிலில் பெற்றுக் கொள்ளலாம். (382)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கார்த்திகேசு திருஞானசம்பந்தர்

(ஓய்வுபெற்ற நில அளவையாளரும். யா/தொழில்நுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளரும்)
(நயினாதீவு)

ஆண்டவன் படைப்பு: 13-06-1938
அரக்கர் பறிப்பு; 16-08-1990
திதி 14 — 08 — 1993

மூன்றாண்டு சுழன்றாலும் மனச்சுமைகள் மாறாது
உங்கள் முகம் காணாது எம் ஏக்கம் மாறாது
உங்கள் நிழல் தொடர எமது பணி மாறாது,
கண் கண்ட தெய்வமாய் காத்திடவே-
இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்:
மனைவி பிள்ளைகள்.

621, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (26909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு வீட்டுக்குரிய பாலை நிராந் திகளும், வேப்பம் பலகை களும் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: பூலோகசிங்கம், கணேஸ் ஸ்ரோர்ஸ், மந் திகை, புலோலி. (26936)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (26821)

## தேவை

இறைச்சிக் கோழிகள் மொத்தமாகக் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல் லூர். (26930)

## மலிவு விற்பனை

ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளு டன் 6-8-93 முதல் 14-8-93 வரை மலிவு விலையில் பெற் றுக் கொள்ளலாம். Bond கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6402)

## உதவியாளர் தேவை

வைத்திய நிலையத்தில் தாதியாகக் கடமையாற்றக் கூடிய 25 வயதுக்குட்பட்ட பெண் உதவியாளர் (பயிலு னர்) தேவை. தொடர்பு: நடன முருகன் வைத்திய சாலை, சந்திரச் சந்தி, யாழ்ப் பாணம். (6415)

## வெளிவந்துவிட்டது

பிரார்த்தனை - மாலை (தோத்திரத்திரட்டு) ஆக்கம்: ஆத்மஜோதி முத்தையா. வெளியீடு: மக்மிலன் புத்தக சாலை, யாழ்ப்பாணம். இடைக்குமிடம்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை நல்லூர், மக் மிலன் யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. (சி-5659)

தோத்திரத்திரட்டு, கூட்டு வழிபாடு ரூபா 30/- (மலி வுப்பதிப்பு) அஷ்டலக்ஷ்மி புத் தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-5658)

## தவறிவிட்டது

29-7-93 இரவு அல்லிப் பளை இறங்குதுறையில் இருந்து பஸ் நிலையத்திற்கு செல்கையில் பிரயாணப்பை (சொக்லேற் நிற கிட்பாக்) தவறிவிட்டது. அதனுள் முக் கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத் துடன் தொடர்புகொள்ள வும். க. கிருபாகரன், இல. 42, செட்டித்தெரு, நல் லூர், யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26922)

4426801/83 V இலக்க முடைய ஜெயரட்ணம் கருணா கரன் என்பவரின் அடையாள அட்டை 06-08 93 அன்று நுணாவிலுக்கும் - யாழ்ப்பா ணத்துக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் ஜெ. கருணாகரன் "சந்திர வாசா" துன்னாலை தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். (26934)

## O/L MATHS


Distinction பெறுபேற டைய 26 வருட அனுபவ முடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப் படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக் குளி. (6407)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

14 - 08 - 1993

தோற்றம்: 19 — 01 — 1958



மறைவு: 15 — 07 — 1993

அமரர்

## சுப்பிரமணியம் தபீந்திரன் (ராஜன்)

(ராஜன் அரிசி ஆலை உரிமையாளர் - உசன்)

15-07-1993இல் அமரராகிவிட்ட எனது மகனின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 14-8-93இல் எமது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி:

திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் குடும்பத்தினர்,

"ராஜன் மில்"
உசன்.
மிருசுவில். (26982)

---

# 6ஆம் மாத அந்தியேட்டி சபிண்டீகரண நாள்



அமரர்

## கிட்டிணர் சின்னையா

(இளைப்பாறிய நகர காவலர்)

தோற்றம்: 04—06—1938

மறைவு: 16—02—1993

நாளை (15-08-93) நடைபெறும் அமரரின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உறவினர், அன்பர் அனைவரையும் அன்புடன் கோருகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினர்.

"ஸ்ரீ முருக பவனம்"
இமையாணன் மேற்கு,
வல்வெட்டித்துறை. (26906)

---

# MATHS CENTRE

NELLIADY.

## A/L 95

தூயகணிதம் (புதிய பிரிவு)

ஆசிரியர்: திரு. அருளானந்தம்

ஆரம்பம்: 14 - 8 - 1993 (இன்று)

(சி-5'89) பி ப. 4. 00

---

# மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ். குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டும் பாரிய விறகுப் பிரச்சினைகளை சமாளிக்குமுகமாக யாழ். குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சக்திப் பகுதி,

**த. பொ. மே. கழகம்,**

காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(இ-5582)

---

# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

சங்க பொதுச் சபை பிரதிநிதிகளுக்கு

## 2ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

29 — 08 — 1993

மேற்படி சங்கத்தின் 2ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 29 - 08 - 1993 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில், தென்மராட்சி - இயற்றாலையில் உள்ள சங்க, தாவர விலங்கியல் விவசாய பண்ணையில் நடைபெறவிருக்கின்றது என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உபவிதி 26இல் 7ஆவதின் பிரகாரம் மேற்படி வருடாந்தக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அப்பிரேரணையின் பிரதியொன்றை, 24 - 08 - 1993க்கு முன்னர் சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பிட்ட பிரதி பின்னர் கிடைக்கப்பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி:

யா. மா. பே. உ. ச.,
த. சிவசுப்பிரமணியம்,
மாவட்ட தலைவர்.

யா. மா. பே. உ. ச.,
ந. பாலவினாயகர்,
மாவட்ட செயலாளர்.

(26919)

---

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்பணி: 23 — 02 — 1930



விண்பணி: 07 — 08 — 1991

## அமரர் ஆறுமுகம் குலசேகரம்

(பாலபண்டிதரும், முன்னாள் துணுக்காய்-சமாதான நீதிவானும்)

நீண்டதோர் நிகழ்வது நெஞ்சத்தை நெருடியது
ஆண்டு இரண்டு சென்றதங்கே அமையவில்லை-
எங்கள் மனம்
மீண்டுதித்து ஏழ்வரெமக்கு எந்தையாய் வந்தவரே!
சண்டுலகில் இரண்டாண்டு வெறியதனை-
ஈடுசெய்யலாகாதோ!
மாண்டவர் மீண்டதில்லை - இருந்தும்
உங்கள் மறைவை மனம் ஏற்குதில்லை

என்றும் உங்கள் ஆதி வேண்டி இறையடி பூசிக்கும்;

மனைவி: சௌபாக்கியலக்ஷ்மி குலசேகரம்,
பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி,
மைத்துனர் தம்பிராஜா குடும்பம்.

"துர்க்கா ஸ்தான்",
பிரதான வீதி, துணுக்காய். (26394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நூலகம்

## உதயன்

# இந்தியாவின் நடிப்பு

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டத்தை இந்திய அரசு மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்திருக்கிறது. பத்து மாதங்களின் பின்னர் ஆயிரத்து நூற்றிருபத்தொன்பது அகதிகள் சென்னையிலிருந்து புறப்பட்டு நேற்றுக்காலை திருமலை வந்து சேர்ந்தனர்.

தமிழக உயர் அதிகாரி ஒருவர் வெளியிட்ட தகவலின் பிரகாரம், இதுவரையில் சுமார் 8,000 அகதிகள் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

சென்னைத் துறைமுகத்தில் கப்பலில் கால் வைப்பதற்கு முன்னர் அகதிகள் இருவர் அங்குள்ள செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டிகள் தமிழக அதிகாரி கூறிய சுய விருப்பம் எத்தன்மையது என்பதை நன்றே புலப்படுத்துகின்றன!

அகதி முகாம்களில் ரேஷனுக்கு [பங்கீட்டுக்கு] தரும் பொருள்கள் எங்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. தங்குவதும் சிரமம். முகாம்களை விட்டு வெளியில் சென்று உழைப்பதற்கு இருந்த வசதியும் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்த நிலையில் எமது பிள்ளைகுட்டிகளை காப்பாற்றுவது கஷ்டமாக உள்ளது. அதனால் சொந்த ஊருக்குத் திரும்பி எப்படியாவது பிள்ளைகளைக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கையில் தான் இலங்கை திரும்புவதற்கு ஒப்புதல் அளித்தோம்— என்றார் ஒரு பெண்.

எனது பிள்ளைகள் மூன்று பேர் 'பிளஸ்' 2 சித்தி எய்தி விட்டார்கள். ஆனால் நாங்கள் ஈழத்தவர்கள், அகதிகள் என்பதால் அவர்களுக்கு கல்லூரியில் அனுமதி தருகிறார்கள் இல்லை. அதனால் சொந்த ஊருக்குப் போய் பிள்ளைகளைப் படிக்க வைக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே அங்கு செல்ல விருப்பம் தெரிவித்தேன்— இது இரண்டாவது பெண்மணி 'தூரதர்ஷன்' தொலைக்காட்சிச் செய்தியாளருக்கு அளித்த செவ்வி.

ஈழத் தமிழ் அகதிகள் திரும்பிவருவதற்குச் சொந்தத்தில் விருப்பம் தெரிவித்திருப்பது இப்படியான மறைமுகமான நிர்ப்பந்தங்களினால் தான். ஆனால் அதனை தமிழக அரசும், இந்திய அரசும் மறைக்க முயல்கின்றன; முழுப்பூசினிக்காயை சோற்றில் புதைத்து மறைக்க முயல்வது போல!

"ஏசியா வாச்" என்ற மனித உரிமை அமைப்பும் ஈழத்தமிழ் அகதிகளை இந்தியா நிர்ப்பந்தமாகவே அனுப்புகிறது என்று கூறி நிறுத்தக்கோரியும் அதனைக் கருத்தில் கொள்ளாது இந்திய அரசு செயலில் இறங்கியுள்ளது. இது விடயத்தில் ஐ. நாவும் பக்கம் சார்ந்து செயற்படுகிறதா என்ற சந்தேகம் தானாகவே எழுகிறது.

ஈழத்தமிழ் அகதிகளை தன்னால் பராமரிக்க முடியாது, அது கஷ்டம், அப்படி ஒரு கடமையோ, தேவையோ தனக்கு இல்லை என்று இந்தியா கூறுவது வேறு. தனது மனித நேயத்தை உலகம் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று காட்டுவதற்காக இப்படி மறைமுகமான பலாத்காரத்தில் இறங்குவது பெரும் அவமானமாகும்.

திரும்பி வரும் ஈழ அகதிகள் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியுமா, உயிர்ப் பாதுகாப்பு உண்டா, மறுவாழ்வைத் தொடங்க முடியுமா, அதற்கான வசதி வாய்ப்புகள் கிடைக்குமா என்பது பிரச்சினையின் அடுத்த பக்கம்.

இந்தியாவின் நேர்மையின்மையும் நடிப்பும், பெருமை பேணுவதற்கு ஒவ்வாத வழி நாடும் கபடமும் இங்கே பிரதிபலிக்கப்படுகின்றன.

## பாடசாலைகளில்

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிறு பி. ப. 1 மணிக்கு நிலையத் தலைவர் திரு. சி. வி. பரமேஸ்வரன் தலைமையில் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். (த)

o o o

தென் புலோலி சிங்கைநகர் அறவழி பாலர் பாடசாலையின் 14ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று சனிக்கிழமை திரு. ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறும். (த-173)

## வெளியூர் தபால் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 14

"குமாரி" கப்பலில் வெளியூர்களுக்கான தபால்கள் அனுப்பப்படவிருப்பதால், பொதுமக்கள் வெளியூர் தபால்களை நாளை காலை 8.30 மணிக்கு முன் தபால் பெட்டிகளில் சேர்க்கும்படி யாழ். பிரதம தபால் அதிபர் அறிவித்துள்ளார். (உ-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஆக. 14

சுன்னாகம் சாந்தி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டரங்கில் நடத்தி வரும்—9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதும். (உ-20)

o o o

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 23 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை இளைஞர் வி. க. அணியை எதிர்த்து புனித ஆரோக்கியநாதர் வி. க. அணி மோதும். இந்த ஆட்டம் கொழும்புத்துறை இந்து ம.வி. மைதானத்தில் நடைபெறும்

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு ஜெறாலைன் ஆடுகளத்தில் நடைபெறும்.

கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் வள்ளுவன் வி. க. அணியை எதிர்த்து உடுவில் சென் மேரிஸ் வி. க. அணி மோதும். (உ-17)

## கைது

திருமலையில் கன்னி என்னுமிடத்தில் கடந்த சனியன்று இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப் பின் போது மகேஸ் (வயது 21) என்ற இளைஞரை கைது செய்து முகாம் கொண்டு சென்றுள் [illegible] (த-5)

## முதல் தொகுதியினர் வந்தனர்

# 2 ஆவது தொகுதி அகதிகள் செவ்வாய் திருமலைக்கு!

கொழும்பு, ஆக. 14

388 குடும்பங்களைச் சேர்ந்த — ஆயிரத்து 59 பேரைக் கொண்ட இரண்டாவது தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சென்னையில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலை நோக்கிப் புறப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் "எம்.வி. நிக்கோபார்" கப்பல் மூலம் சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட ஆயிரத்து 159 அகதிகள் நேற்று திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தனர் (உ-எ-162)

# 53 மாணவர்களுக்கு கடன் அடிப்படையில் சைக்கிள்

இன்பருட்டி கிராமத்தைச் சேர்ந்த 53 மாணவர்களுக்கு நீண்ட கால கடன் திட்டத்தில் சைக்கிள் வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இன்பருட்டி கிராமிய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இவற்றை வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 5 மாணவர்களுக்கு சில தினங்களில் சைக்கிள் வண்டிகள் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கே இத்திட்டத்தின்கீழ் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-173)

# யோசெப் அடிகளாரின் சேவை சகலருக்கும் முன்னுதாரணம்

## மணிவிழாவில் பேராசிரியர் பாராட்டு

"யோசெப் அடிகள் தமது மதவட்டத்தைத் தாண்டி சகல மக்களுக்கும் சேவை புரியும் ஒரு மக்கள் தொண்டன். அவர் மதம் கடந்த தமிழ் உணர்வினால் ஒற்றுமையின் சின்னமாகிய வருங்காலத்தைக் காட்டி நிற்கின்றார். அவரது சேவை ஏனையோருக்கு முன்னுதாரணமாகும்."

அருட்திரு ஜி. ஞ பிரான்சிஸ் யோசெப் அடிகளாரின் மணிவிழாவில் சிறப்புரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த மாதம் 28ஆம் திகதி யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசிய அவர்,

"யாழ்ப்பாண பாரம்பரியத்தின் மிகப்பெரிய கல்விப் பாரம்பரியத்தை இந்தப் பிரதேச மாணவர்களிடையே வளர்க்கும் சிந்தனையுடன் செயலாற்றிய அவர் வெறும் கல்லூரி அதிபராக அன்றி எமது பிரதேசத்தின் அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களுக்காக உழைத்த பெரியாராகவும் திகழ்கிறார்" என்று கூறினார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தமது தலைமையுரையில்; அடக்கம், அன்பு, ஆற்றல், பலமான சிந்தனை கல்வி நிறையப் பெற்ற அவர் தன்னைச் சாதாரணப்படுத்திக் கொண்டு சேவைகளுனூடாக எல்லோராலும் கவரப்பட்டவர் என்று கூறினார்.

யாழ் ஆயரின் சார்பில் வாழ்த்துரை வழங்கிய அருட்திரு. எஸ். எஸ். இம்மானுவேல் பேசும்போது,

"மனித வாழ்வு கால நீளத்தினால் அளக்கப்படுவதில்லை. சகல மக்களையும் அரவணைக்கும் பண்பாட்டை உள்ளடக்கிய தெய்வ விசுவாசம் நிறைந்த அகல ஆழம் கொண்டது. எந்த மதத்தைச் சார்ந்தவரானலும் அந்த மதத்தின் கட்டுப்பாடுகளை மதித்து நடக்க வேண்டும். அந்த நீள அகல ஆழத்தை திடப்படுத்த வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் தனிக் கொடையான கல்வியைப் பிறர் அழிக்க முன்வரும் போது சகல மக்களும் ஒன்றாக இணைந்து அதனைப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறினார்.

யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பேசும்போது;

"தென்கிழக்காசியாவின் சிறந்த நூலகம் அழிக்கப்பட்டபோது குழந்தைகளைச் சான்றோனாக்கும் சிறந்த நண்பன் நூல்களே என்று கூறி நூல்களைத் திரட்டியுதவும் ஒரு ஆசானாக விளங்கிய அடிகள் எமது மண்ணின் கல்வி சிறக்க வேண்டும் என்பதற்காகவும், சமூகம் நல்வழியில் வாழ வேண்டும் என்பதற்காகவும் கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவராகித் தம்மைச் சேவைக்கே அர்ப்பணித்தவர்" என்று கூறினார்.

யோசெப் அடிகளாரின் மணிவிழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. புஷ்பரட்ணம் எழுதிய "வட இலங்கையில் சிங்கநகர்" எனும் நூல் வெளியிடப்பட்டது.

இந்நூலை வெளியிட்டு உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ்,

அண்மைக் காலங்களில் தமிழர் வாழும் பிராந்தியங்களில் சில தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவற்றின் முக்கியத்துவத்தை மக்கள் அறியக்கூடிய வகையில் நூல்களோ விரிவான ஆய்வுக்கட்டுரைகளோ வெளிவரவில்லை. இந்நிலையில் இன்று வெளியிடப்படும் நூல் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் பெறுபேறாக அமைந்திருப்பது பாராட்டத்தக்க ஓர் அம்சமாகும் என்று கூறினார்.

இந்நூலில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னியில் சோழர் ஆட்சியோடு சிங்கை நகரைத் தலைநகராக கொண்ட அரசு இருந்ததென்பதையும், அவ்வரசே 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூருக்கு இடம்மாறியதெனவும் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் சண்முகதாஸ் கூறினார்.

விழாநாயகர் பிரான்சிஸ் யோசெப் அடிகளாரிடமிருந்து நூலின் முதல் பிரதியை அதிபர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் பெற்றுக் கொண்டார். அன்பர்களும், ஆதரவாளர்களும் அடிகளாருக்கு மாலைகள் சூடியும் பரிசில்களை வழங்கியும் கௌரவித்தனர்.

பிரான்சிஸ் அடிகளார் தமது பதிலுரையில்;

"நாம் எல்லோரும் மதச் சார்பற்று ஒன்றிணைந்து சமுதாயத்தின் உயர்வுக்காகப்பாடுபட வேண்டும். அநீதியின் மத்தியில் நீதியை நிலைநாட்டி எமது மக்களுக்குத் தொடர்ந்தும் பணிசெய்ய விரும்புகிறேன். நாமெல்லோரும் இறைவனின் கருவிகள். அவர் விரும்பியதைச் செய்ய வேண்டியதே கருவியின் செயல்" என்று கூறினார்.

திருவாளர்கள் ம. யேசுதாசன், சு. செல்வநேசன் ஆகியோரும் பேசினார்கள். (க-111)

## நாளை

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய மாதிரி சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1மணிக்கு நடைபெறும். (க-161)

o o o

சுழிபுரம், ஆக: 14

அபிராமியந்தாதி நாற்பதாவது பாடல் ஆய்வுரை நூல் அறிமுக விழா நாளை ஞாயிறு மாலை 6 மணிக்கு பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலய மண்டபத்தில் நடைபெறும். (உ-28)

## மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் மத்தியஸ்தர்களுக்காக நடத்தும் வாராந்த பயிற்சி வகுப்புகள் நாளை முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9. 30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (உ-20)

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

நல்லூர் வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போகுமே

— யோகர் சுவாமிகள்.

## நித்தம் அவன் நினைவே!

இராகம்:- சிந்துபைரவி தாளம்:- ஆதி

பல்லவி

தித்தமினிக்குதடீ அந்த
சிங்கார வேலனின் நாமத்தினைச் சொல்ல
(தித்த)

அனுபல்லவி

நித்தம் அவன் நினைவே என்தன்
நெஞ்சில் நிறையுதடீ
(தித்த)

சரணம்

நல்லைப் பதியினிலே அவன் திருக்
காட்சி தெரியுதடீ
கல்லுமுருகுதடீ சகியே அந்தக்
கந்தன் பெயர் சொன்னாலடீ!
(தித்த)

— ஆ. கி. ஏரம்பமூர்த்தி.

## உற்பத்தி பெருக்கிடுவோம் ஊக்கமாய் உழைத்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் எமக்கு உறுதிப்படுத்த வில்லை.

அப்படி எமது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பின், அவர்களின் பெயர்ப்பட்டியலைத் தருமாறு முதலில் நாம் கோரியபோது, அதனைத் தர மறுத்த ஸ்ரீலங்கா அரசு தற்பொழுது இப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருப்பது வியப்பை தருவதாகும்— என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-8)

## வுனியா-கொழும்பு.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பின்னர் கொழும்பிலிருந்து அங்கு வந்த தீயணைக்கும் படையினர் தீயை அணைத்தனர்.

சிற்றுண்டிச் சாலையில் இருந்த காஸ் சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் தீ மூண்டிருக்கலாம் என நம்பப்படுவதாக ரயில்வே திணைக்களம் அறிவித்தது.

(உ-168)

## இனப்பிரச்சினை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சந்தித்து தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதனையும் முன்வைக்காத இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வையே நம்புகின்றது என்றும்—

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதபலத்துடன் இருக்கும்வரை அமைதி பிறக்காது என்றும்— சொன்னார்.

சிங்களத் தலைவர்கள் உண்மையான மனநிலையுடன் தமிழர்கள் முன் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கவேண்டும் என்றும் அவர் கோரினார்.

''ஒருநாள் நான் தாயகம் திரும்புவேன்'' என்று தெரிவித்த அவர் அது எப்போது என்பதை இப்போதைக்குக் கூறமுடியாது என்றார்.

(உ-எ-6)

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 14

''மக்களின் சுகாதாரப் பிரச்சினைகள்'' தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 2 30 மணிக்கு மீசாலை இழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மீசாலை கிழக்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரிவின் அனுசரணையுடன் நடைபெறும் அந்தக் கருத்தரங்கில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-18)

○ ○ ○

யாழ்ப்பாணம், ஆக. 14

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி வடக்கு பிரிவில் தையல் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

(உ-13)

○ ○ ○

மருதனார் மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் 1991/92, 1992,93 கல்வி ஆண்டில் விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி விவசாய நிறுவனத்தில் நடைபெறும்.

(த-168)

## கைதிகளைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பட்டியல் ஒன்றை இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கூட்டுப் படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தி ஒன்றை மேற்கோள் காட்டி இந்திய வானொலி இத்தகவலை வெளியிட்டது.

(உ-எ-3-6)

# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு புலிகள் பாணியில் பயிற்சி

## இந்தியப் பத்திரிகை தகவல்

சென்னை, ஆக. 14

இந்திய கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியில் செயற்பட்டு வரும் தீவிரவாதிகளுக்கு விடுதலைப் புலிகளின் பாணியிலான கெரில்லாப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலிருந்து வெளியாகும் ''நியூஸ் டுடே'' ஆங்கில தினசரி இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் ''காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு புலிகளின் பயிற்சி'' என்ற தலைப்பில் முதற்பக்கத்தில் பிரதான செய்தி ஒன்று அப்பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது

''காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் மிகச் சிறந்த கெரில்லா யுத்த வீரர்களான தமிழீழ விடுதலைப் புலிகளின் பாணியையும், போக்கையும் ஒத்தவையாக இருப்பதை அவதானிக்க முடிகிறது என்று இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் தகவல் வெளியிட்டிருக்கிறது.

(உ)

## ஹோட்டல் இடிந்தது

பாங்கொக் ஆக. 14

மத்திய தாய்லாந்து பகுதியில் ஹோட்டல் ஒன்று திடீரென இடிந்து விழுந்ததில் 20 பேர் மரணமடைந்தனர். இருநூறு பேர் வரை காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் மேலும் ஐநூறு பேர் வரை இடிபாடுகளினுள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

(உ-9)

## படகோட்டிகள் தடுப்புக் காவலில்

யாழ்ப்பாணம், ஆக. 14

கடந்த 29 ஆம் திகதி கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையினர் பிரயாணிகள் படகுகள் மீது நடத்திய தாக்குதலின் போது அவர்களிடம் பிடிபட்ட 4 படகோட்டிகளும் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் பலாலியில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

போக்குவரத்துத் தடை செய்யப்பட்ட பாதை என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ள கிளாலியூடாக பயணிகளை ஏற்றி சென்றமைக்காக இவர்கள் மீது தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

படகோட்டிகளில் நால்வர் பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

(அ-3)

## திங்களன்று ''குமண'' வரும்

யாழ்ப்பாணம், ஆக. 14

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று மாலை கொழும்பிலிருந்து புறப்பட்ட ''குமண'' கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேர விருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''குமாரி'' கப்பல் அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு நாளை திருகோணமலைக்கு செல்லவிருக்கிறது.

(உ-8)

## இலங்கை வெற்றி

கொழும்பு ஆக. 14

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் மாலையும் இரவும் கொழும்பில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களின் இரண்டாவது கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை அணி எட்டு ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 207 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஒரு நிலையில் 35 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஆனால் இந்திய அணியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்துச் சரிய அது 49.2 ஓவர்களில் 199 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன.

[illegible] வானிடோ மைதானத்தில் நடைபெறும்.

(உ-9)

## மரணமானார்

யாழ்ப்பாணம், ஆக. 14

கடந்த புதனன்று இரவு நெருப்பில் எரிந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் நேற்று அங்கு மரணமானார்.

சுதுமலை தெற்கைச் சேர்ந்த அரசரத்ணம் கமலா (வயது40) என்பவரே மரணமானவராவார்.

(உ-15)

## பதற்றம்

சுழிபுரம், ஆக. 14

சுழிபுரம் திருவடிநிலை கடலில் கடந்த புதன், வியாழக்கிழமைகளில் இரவு கடல் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கப்பல்களின் இரைச்சலால் சுழிபுரம் கிழக்கு, வடக்குப்பகுதி மக்கள் பதற்றமடைந்தனர்.

(உ-28)

## டாக்டர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளையின் விசேட பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

(உ-18)

## இலங்கை அணி பின்னணியில்!

கொழும்பு, ஆக. 14

இலங்கை வந்திருக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அணிக்கும் இடையிலான மூன்று நாள் கிரிக்கெட் ஆட்டம் நேற்று காலியில் ஆரம்பமானது

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை எடுத்தது. தென்னாபிரிக்கா அணி நேற்று ஆட்ட நேர முடிவின் போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை எடுத்திருந்தது.

(உ)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஆக. 14

சாவகச்சேரி மிருக வைத்தியர் அலுவலகத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய் நோய்த் தடை ஊசி மருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8. 30 மணிக்கு ஏற்றப்படும். இதற்கான ஒழுங்குகளை சாவகச்சேரி மிருக வைத்தியர் டாக்டர் செல்வி எஸ். ஞானசுந்தரம் செய்துள்ளார்.

(உ-18)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு அடுத்தவருடமே அம்புலன்ஸ்

யாழ். ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் ஒன்றை அடுத்த வருடமே—அதாவது 94 ஆண்டுப் பகுதியிலேயே — அனுப்பி வைக்கமுடியும் என சுகாதார மகளிர் விவகார அமைச்சு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு தெரிவித்துள்ளது.

யாழ் ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் ஒன்றை தந்துதவுமாறு ஆஸ்பத்திரி உயரதிகாரிகள் கொழும்பில் சுகாதார அமைச்சிடம் கோரியபோதே இவ்வாறு பதில் அளிக்கப்பட்டது.

தற்சமயம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரண்டு அம்புலன்ஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-17)

## யாழ்.மாநகரப் பகுதியில் மின் கம்பிகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 14

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் உள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மின்சார கம்பிகள் இரவு நேரங்களில் வெட்டப்பட்டு திருடப்பட்டு வருகின்றன.

நாவலர்மார்க்கட்டு வீதி, கொழும்புத்துறை வீதி, யாழ். கோவில் வீதி ஆகிய பகுதிகளினூடாக செல்லும் மின்சாரக் கம்பிகள் வெட்டப்பட்டிருப்பதாக யாழ். மாநகர மின்சார பகுதிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய திருட்டுகள் இடம்பெறாமல் தவிர்க்க உதவும்படியும் —

இத்தகைய சம்பவங்களை குறித்து நல்லூர் மாநகர சபையின் இந்துவிடுதி மின்சாரசபை அலுவலகத்துக்கு அறிவிக்குமாறு மாநகர மின்சாரசபையின் பொறியியலாளர் திரு. நவரத்தினராசா பொதுமக்களிடம் வேண்டியுள்ளார்.

(உ-17)

## அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காய செய்கை ஒரு வகை நோயால் பாதிப்பு

அராலிப் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள பம்பாய் வெங்காயப் பயிர் ''திரிப்ஸ்'' எனப்படும் ஒரு வகை பூச்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது காணப்படும் கடும் வெப்ப காலநிலையில் இப்பூச்சியின் பெருக்கம் தீவிரமாக இருப்பதாகவும்—

தற்சமயம் கிடைக்கக்கூடிய விவசாய இரசாயனப் பொருள்களும் காலாவதியானவை என்பதால் அவற்றினால் விவசாயிகள் சரியான பயன் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-12)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா மயில்வாகனம்

(இளைப்பாறிய அதிபர், மல்லாவி மகா வித்தியாலயம்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மயில்வாகனம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானி, காலஞ்சென்ற கருணேந்திரன், வாணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மதியாபரணம் (பொறியியலாளர் — R D. D, மன்னார்), ராஜராஜேஸ்வரி, தியாகராஜா (லிபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செ. திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரரும், சுந்தரேசன், உரோமேசுதன், நேசகாந்தன், வாசுகி, காயத்திரி, கருணராஜ், கருணதாஸ், கருணகாந்த், கோவர்த்தனி, கோசலரூபி, கேசவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் மல்லாகத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பழம்பிள்ளையார் வீதி, மல்லாகம். வாணி-தியாகராஜா

(26943

## அருளப்பு தேவசகாயம்

(முன்னாள் மல்வம் திருக்குடும்ப ஆலய சங்கிடுத்தார்)

மல்வம் உடுவிலைச் சேர்ந்த அருளப்பு தேவசகாயம் நேற்று (13 - 08 - 93) காலமானார்.

இவர் நேசம்மாவின் அன்புக் கணவரும் தேவபெனடிற் (ஜேர்மனி), தேவபேனாட், பேர்னடேத், பேணடேத், பெசமன்ஸ் / செசி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், விமலா (ஜேர்மனி), சி அல்பிரட் (பனம்பொருள் கூட்டுத்தாபனம்), ஜெகநாதன் / சான்வி (கிறீஸ்), யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பேளினா, சாலினா, கெறஸ்டேனியல், லொயின், டெஸ்மன், டால்ணியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14 - 8 - 93) மாலை 3 00 மணிக்கு திருப்பலியுடன் மல்வம் சேமக்காலையில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

மல்வம் உடுவில், சுன்னாகம். சி. அல்பிரட (மருமகன்) தேவபேனாட் (மகன்)

(26940)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டடினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org